# பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள 1C பாடசாலைகளில் அதிபர்களது வகிபங்கு - ஓர் ஆய்வு

மிதிலா சி, செல்வராஜா மா

ஒரு பாடசாலையின் ஆளுமை மிக்க தலைவர் எனும் வகையில் அதிபரின் வகிபங்கு ஒவ்வொரு பாடசாலை அபிவிருத்திக்கும் இன்றியமையாததாகும். பாடசாலைத் தலைவர்களான அதிபர்கள் சிறந்த தலைமைத்துவ வகிபங்கினைக் கொண்டிருத்தல் அப்பாடசாலைகளை விளைதிறன் உள்ள பாடசாலையாக உருவாக்க வழிவகுக்கும். இந்தவகையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள 1C பாடசாலைகளில் அதிபர்களது வகிபங்கு எவ்வாறு உள்ளது என்பதை இனங்காணும் பொருட்டு இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பட்டிருப்பு வலயமானது 03 பிரதேசப் பிரிவுகளை உள்ளடக்கியது. இங்கு பதினாறு 1C பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ்வலயத்தில் 1C பாடசாலைகளில் உள்ள பல்வேறு குறைபாடுகள், பிரச்சினைகள் காரணமாக பாடசாலைகளின் தரம் குறைவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்துடன் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வலய 1C பாடசாலைகளில் மிகவும் பின்னடைவில் காணப்படுவதுடன் இவ்வலயத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் இவ்வலயத்தில் உள்ள 1C பாடசாலைகளில் அதிபரின் வகிபங்கு எவ்வாறுள்ளது, மாணவர்களின் கற்றல் அடைவுகள் குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள், பாடசாலைகளின் தரம் குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு பாடசாலைத் தலைவரான அதிபரின் வகிபங்கு எந்த வகையில் காரணமாக அமைகின்றன, இப்பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் எவை, அதிபரின் முகாமைத்துவக் குறைபாடுகள் எவை, இப்பாடசாலைகளை விளைதிறன் மிக்க பாடசலையாக உருவாக்குவதற்கு அதிபர் எவ்வாறான முகாமைத்துவ வகிபங்கினைக் கொண்டிருக்க வேண்டும் என்பனவற்றை இனம் காணும் வகையில் இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்வாய்வு செய்யப்பட்டதன் மூலம் சமூக அங்கத்தவர்கள் பாடசாலை செயற்பாடுகளை ஒழுங்கமைக்க முற்படுதல், பழைய மாணவர்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப்பு பாடசாலை நிருவாகங்களுக்கு வழங்கப்படாமை, அதிபரின் சர்வாதிகாரப் போக்குகள், அதிபரினால் அதிகளவான நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாத தன்மை, வளப்பற்றாக்குறை, அதிபர்களுக்கான செயற்திட்டங்கள் இடம்பெறாமை போன்ற காரணங்கள் பட்டிருப்பு வலய 1C பாடசாலைகளில் உள்ள அதிபர்களின் வகிபங்கிற்கு சவாலாக அமைகின்றன என்பது இனம் காணப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** பட்டிருப்பு வலயம், அதிபர், 1C பாடசாலைகள்

*Department of Education, Eastern University, Sri Lanka. Email:jithu49@yahoo.com*